# தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை
மற்றும்
முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்
இணைந்து நடத்தும்

## இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம்

தொகுதி - II

## UGC sponsored two day National Seminar on HUMAN RIGHTS IN TAMIL LITERATURE



பதிப்பாசிரியர்
முனைவர் க. முருகேசன்

157. *Dr. T. Muraleeswari* 712
Atrocities of Bonded Labour System Portrayed in Mahasweta Devi's Select Short Stories

158. *கி. சுப்பிரமணியன்* 718
கோவூர் கிழார் பாடல்களில் மனித உரிமைக் குறிப்புகள்

159. *அ. ராஜி* 722
இலக்கியங்களில் மனித உரிமைகள்: ஒரு பருந்துப் பார்வை

160. *சு. மலர்விழி* 726
ஆண்டாள் பிரியதர்சினியின் கவிதைகளில் மனித உரிமைகள்: திருநங்கையரை முன்னிறுத்தி ஒரு தேடல்

161. *முனைவர் வெ. சுகந்தா* 731
தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

162. *முனைவர் பா. வேலம்மாள்* 734
தமிழ் இலக்கியங்களில் பெண்ணுரிமை சிந்தனைகள் (கவிதைகளை முன்வைத்து)

163. *முனைவர் மொ. இரவிக்குமார்* 739
தமிழ்க் கவிதைகளில் காணலாகும் மனித உரிமைகள்

164. *முனைவர் இரா. மணிமேகலை* 744
ஐவகை மன்றத்து அமைதி

165. *முனைவர் க. முருகேசன்* 749
வைரமுத்துவின் படைப்பில் மனித உரிமைப் பதிவுகள்

166. *ஆ. நித்யா* 756
சுஜாதாவின் மனித உரிமைப்பற்றிய சமூகப்பார்வை

167. *ம. விவேக் பிரபு* 760
வைரமுத்துவின் திரைப்பாடல்களில் பெண்களின் உரிமைக் குரல்

168. *முனைவர் க. பழனிவேல்* 765
புரட்சிக்கவியில் மனித உரிமைச் சிந்தனைகள்

169. *இரா. அபிமன்யு* 769
மாத்திரை சிறுகதையில் பெண்ணுரிமை

170. *முனைவர் சு. சதீஷ்குமார்* 774
சூதுபோர்ச் சருக்கத்தில் மனிதஉரிமை மீறல்கள்

171. *ச. மல்லிகா* 779
பிரபஞ்சனின் சிறுகதைகளில் பெண்ணுரிமை

172. *மு. ஜெயலட்சுமி* 784
அகநானூறு காட்டும் பெண்ணுரிமை

173. *முனைவர் ந. இரஞ்சன்* 791
தமிழ் மண்ணின் உரிமை காப்போம்

174. *முனைவர் கு. முத்துக்குமார்* 795
இலக்கியப் படைப்பாளிக்கெதிரான உரிமை மீறல்

# 174. இலக்கியப் படைப்பாளிக்கெதிரான உரிமை மீறல்

**முனைவர் கு. முத்துக்குமார்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

காலங்காலமாக மனித இனம் தன்னை நாகரிக வாழ்க்கையில் செறிவூட்டி ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமைகளை நிலைநிறுத்தி வருகிற முயற்சியைச் செய்து வருகிறது. உரிமை என்பது உலக உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வாக்கின்படி ஒவ்வொரு உயிரும் தான் விரும்புவதைத் தன் விருப்பப்படி பிறரைப் பாதிக்காது வாழும் உரிமையைப் பெற்றிருக்கிறது. பாலினத்தாலும், பிறப்பினத்தாலும், நிறத்தாலும், மொழியாலும் மனித இனத்தில் தனது அதிகாரத்தைப் பிறரின் மீது ஏற்றித் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டும் இனமாகத் தன்னை அடையாளப்படுத்துகிறது. சிந்திக்கத் தெரிந்த மனித இனம் தன்னை நாகரிகப்பாதையில் செலுத்தி அனைத்துவிதத் தேடல்களிலும் தன்னைச் செறித்துப் புதிய பழக்கங்களை ஏற்படுத்திப் பண்பாட்டு அடையாளங்களை வளர்த்திருக்கின்றது. மனித இனத்தின் பண்பாட்டு வளர்ச்சியைக் கிளர்ந்தெழுந்தக் குழுக அமைப்பிலிருந்தும் அக்குழுகத்தில் எழுந்த வழக்காறுகளிலிருந்துதான் வரலாறுகள் மீட்டெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு காலகட்டத்தில் கைக்கொண்ட வழக்காறுகள் காலமாற்றத்திற்குட்படுத்தி மாற்றங்களை ஏற்படுத்தி வாய்மொழி வழக்காறுகளாகத் தொடர்ந்து பேசப்பட்டும் பாடப்பட்டும் பின்னர் எழுதப்பட்டும் இலக்கியங்களாக முகிழ்கின்றன. இலக்கியங்களிலிருந்துதான் வரலாறு எழுதப்படுகிறது. இலக்கியங்கள் தம் காலத்து மாந்தர்களின் வாழ்க்கையைக் கண்ணாடியாகக் காட்டுகிறது. மொழியை அடிப்படையாகக் கொண்டுள்ள தமிழினம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக எழுந்துள்ள இலக்கியங்கள் வழியேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

நமது தொன்மையான வரலாறும் இலக்கியங்களிலிருந்துதான் மீட்டெடுக்கப்பட்டிருக்கிறது. மனித இனம் தான் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட வாழ்க்கை முறை, ஏற்பட்ட அவலங்கள், அதிகாரத்தினால் ஏற்பட்ட ஆதிக்கம் ஆகியவற்றைத் தங்கள் படைக்கும் படைப்புகளின் வழி வெளிப்படுத்தினர். தனிமனித உரிமைகளைச் சீண்டும் / சிறைப்படுத்தும் / அடிமையாக்கும் முறைகளை கேள்விக்குட்படுத்தித் தங்களை மாய்த்து இச்சமூகம் உய்ய வழிவகுத்தவர்கள் இலக்கியப் படைப்பாளிகள். அதிகாரச் சமூகத்தில் எதிர்க்குரல் எழுப்பியவர்கள் நசுக்கப்பட்டார்கள், அழிக்கப்பட்டார்கள் எனினும் இன்றுவரை